## 6.4 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நிலையான மாதாந்திர பயணப்படி, தினப்படி மற்றும் அமர்வுப்படி அளித்தல்

ஊரக வளர்ச்சி (சி1) துறை

அரசாணை (நிலை) எண்.362 நாள் : 20.12.1997

படிக்க :

(1) அரசாணை (நிலை) எண்,101 ஊரக வளர்ச்சி, நாள் 27.3.97.

(2) ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.11168/97/PCA, நாள் 2.9.97.

**ஆணை**

ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஊராட்சிப் பணிகளை செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளும் பயணச் செலவுகளை ஈடுசெய்ய உகந்த வகையில் நிலையான மாதாந்திர பயணப்படி வழங்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்/ உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்/ உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சிகளின் தலைவர்கள்/ உறுப்பினர்கள் ஆகியோருக்கு பயணப்படி/ தினப்படி/ அமர்வுப்படி வழங்கவும், பயணம் செய்யப் பயன்படுத்தும் முறைகளை நிர்ணயித்தும் பார்வை 1–ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டது. ஊராட்சி அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற பயணப்படி/ தினப்படி/ அமர்வுப்படி ஆகியவற்றிற்கு உச்ச வரம்புகள் நிர்ணயிக்க ஊரக வளர்ச்சி இயக்குநர் பார்வை 2–ல் காணும் கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையையும், ஊராட்சி அமைப்புகளின் உறுப்பினர்களின் கோரிக்கையையும் அரசு விரிவாகப் பரிசீலித்த பின்னர், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்று, பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையில் சில மாற்றங்கள் செய்து, மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்/ உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்/ உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சிகளின் தலைவர்கள்/ உறுப்பினர்களுக்கு, கீழ்க்கண்டுள்ளவாறு, நிலையான மாதாந்திர பயணப்படி./ பயணப்படி/ தினப்படி/ அமர்வுப்படி வழங்கி அரசு ஆணையிடுகிறது –

(1) எல்லைக்குட்பட்ட பகுதிகளில், உள்ளாட்சிப் பணிகளை செயல்படுத்த மேற்கொள்ளும் பயணச் செலவுகளை ஈடுசெய்வதற்கான நிலையான மாதாந்திரப் பயணப்படி (Fixed Monthly Travelling Allowance)

| | |
|---|---|
| அ) ஊராட்சித் தலைவர்கள் | ரூ.300/– |
| ஆ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | ரூ.500/– |
| இ) ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் | ரூ.200/– |
| ஈ) மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | ரூ.1000/– |
| உ) மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் | ரூ.300/– |

(2) எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலோ அல்லது மாவட்டங்களுக்கு வெளியிலோ மேற்கொள்ளும் அலுவலர் சார்ந்த பணிகளுக்கான பயணப்படி மற்றும் தினப்படி –

**(அ) அட்டவணை –**

| வ. எண் | பதவி | தகுதி | | |
|---|---|---|---|---|
| | | இரயில் | தினப்படி | பேருந்து |
| (i) | மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | முதல் வகுப்பு | ரூ.50/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் |
| (ii) | அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர் | முதல் வகுப்பு | ரூ.30/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் |
| | ஆ) ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் | இரண்டாம் வகுப்பு | ரூ.30/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் |
| (iii) | அ) ஊராட்சித் தலைவர்கள் | முதல் வகுப்பு | ரூ.20/– | பயணம் செய்த பேருந்து கட்டணம் |
| | ஆ) ஊராட்சி உறுப்பினர்கள் | இரண்டாம் வகுப்பு | –– | பயணம் செய்த பேருந்து கட்டணம் |

(ஆ) தலைமையிடத்திலிருந்து 8 கிமீ தூரத்திற்குள் மேற்கொள்ளப்படும் பயணங்களக்க எவ்வித பயணப்படியும் கிடையாது.

(இ) தலைமையிடத்திலிருந்து 8 கிமீ தூரத்திற்கு மேல் மேற்கொள்ளப்படும் பயணங்களுக்கு கீழ்க்கண்டவாறு பயணப்படி பெறவேண்டும்.

(1) 6 மணி நேரத்திற்குட்பட்ட பயணங்களுக்கு 30% தினப்படி

(2) 6 மணி முதல் 12 மணிக்குட்பட்ட பயணங்களுக்கு 70% தினப்படி

(3) 12 மணி நேரத்திற்கு மேற்பட்ட பயணங்களுக்கு 100% தினப்படி

(ஈ) ஊராட்சி உறுப்பினர்கள் தங்கள் எல்லைக்கு அப்பாற்பட்டு பயணம் மேற்கொண்டு தினப்படி மற்றும் பயணப்படி கோர சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களினால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

(உ) மாவட்டங்களுக்கு வெளியே அலுவல் காரணங்களுக்காக பயணம் செய்ய நேரிட்டால் ஊராட்சிகளின் ஆய்வாளரின் (மாவட்ட ஆட்சியர்) முன் அனுமதி பெறவேண்டும்.

(3) உள்ளாட்சி அமைப்புக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான அமர்வுப்படி:

| வ. எண் | பதவி | அமர்வுப்படி |
|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் | ரூ.100/– (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| 2. | அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர் | ரூ.75/–(ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| | ஆ) ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் | ரூ.50/–(ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| 3. | அ) ஊராட்சித் தலைவர்கள் | ரூ.50/–(ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |
| | ஆ) ஊராட்சி உறுப்பினர்கள் | ரூ.25/–(ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) |

3. மேலே பத்தி –2ல் ஆணையிடப்பட்டுள்ள வகையில் ஏற்படும் செலவினங்களை அந்தந்த மாவட்ட ஊராட்சிகள்/ ஊராட்சி ஒன்றியங்கள்/ ஊராட்சி அமைப்புகளே ஏற்க வேண்டும். இந்த அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

4. அனைத்து மாவட்ட ஊராட்சிகள்/ ஊராட்சி ஒன்றியங்கள்/ ஊராட்சி அமைப்புகளுக்கு இந்த ஆணையின் நகலை அனுப்பும்படி ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. இந்த ஆணை, நிதித்துறையின் அசாகு.எண்.6271/FS/P/97, நாள் 19/12/97ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்